**Copy of Deposition**
**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:1

| Name | பழனியம்மாள் (PW 1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, கருக்கம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். முத்துவீரன் எனது கணவர் ஆவார். 30.04.2023ம் தேதியன்று எனது கணவர் முத்துவீரன் சிவகிரி, சின்னியம்பாளையத்தில் உள்ள மருத்துவமனைக்கு மருந்து வாங்குவதாக சொல்லிவிட்டு நடந்து சென்றார். சிவகிரி சின்னியம்பாளையத்திற்கு அருகில் எனது கணவர் முத்துவீரன் நடந்து சென்றுகொண்டிருந்தபோது ரோடு ஓரத்தில் டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் நின்று கொண்டிருந்தது. அதன் மீது பொக்கலைன் ஜே.சி.பி மோதி டாடா ஏஸ் வண்டி எனது கணவர் மீது மோதி விபத்து நடந்தது. சம்பவ இடத்தில் இருந்த மாரிமுத்து, பழனிச்சாமி ஆகியோர்கள் போன் மூலம் எனக்கு விபத்து பற்றி தகவல் சொன்னார்கள். நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவர் முத்துவீரனை பார்த்தேன். எனது கணவர் முத்துவீரனுக்கு தலை, இரண்டு கால்களிலும், தொடை பகுதிகளிலும் காயங்கள் இருந்தது. மேல் சிகிச்சைக்காக எனது கணவர் முத்துவீரனை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

2. அன்றைய தினமே இரவு சுமார் 12.30 மணியளவில் எனது கணவர் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து பற்றி நான் சிவகிரி காவல்நிலையத்தில் புகார் செய்தேன். அந்த புகாரில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்து சவக்கிடங்கு முன்பு வைக்கப்பட்டிருந்த எனது கணவர் முத்துவீரன் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். விசாரிக்கும் போது நானும் உடன் இருந்தேன்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:49:39 +0530

என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எனது கணவர் இறந்ததற்காக நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ரோட்டில் இரண்டு புறமும் மண்பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த மண்பாதை 5 முதல் 10 அடி வரை இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த உடனே சிவகிரி போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் ஏற்பாடு செய்து தான் எனது கணவரை சிகிச்சைக்கா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலீசார் விசாரித்து எழுதி கொண்டு கையொப்பம் வாங்கிகொண்டார்கள் என்றால் சரிதான். அதில் மாரிமுத்து மற்றும் பழனிச்சாமி ஆகிய இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். மாரிமுத்து, பழனிச்சாமி ஆகியோர்கள் நான் செல்லும்போதே அங்கு இருந்தார்கள் அவர்கள் தான் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். சாட்சிகள் இருவரும் எங்களுக்கு பழக்கம் ஆனவர்கள் என்றால் சரிதான்.

2. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து புகைப்படம் எடுத்துகொண்டார்கள் என்றால் சரிதான். அடிபட்ட வாகனத்தை புகைப்படம் எடுத்துகொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் அப்போதே அந்த வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்றே காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க நான் மாரிமுத்து, பழனிச்சாமி ஆகிய மூவரும் சென்றோம். போலீசார் ஏற்கனவே எழுதி வைத்த புகாரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். அதில் நானும் மற்ற சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அதிக நஷ்டஈடு பெறவேண்டி தவறாக புகார் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.10 08:49:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:2

| Name | மாரிமுத்து (PW 2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, வள்ளிபுரம், கருக்கம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். 30.04.2023ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் சின்னியம்பாளையம், காலனிக்கு எதிரில் உள்ள முருகன் டீக்கடையில் நானும், பழனிச்சாமியும் டீ சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது முத்துவீரன் என்பவர் விளக்கேத்தியில் இருந்து கொடுமுடி செல்லும் ரோட்டில் கிழக்கு நோக்கி சின்னியம்பாளையம், காலனி அருகே நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது சின்னியம்பாளையம், காலனிக்கு எதிரே டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் நின்றுகொண்டிருந்தது. அதில் பிளாஸ்டிக் பொருட்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஒரு ஜே.சி.பி வாகனம் பயங்கர வேகமாக வந்தது. அந்த ரோடு விளக்கேத்தியில் இருந்து கொடுமுடி செல்லும்ரோடாகும்.

2. அந்த ஜே.சி.பி வாகனம் நின்று கொண்டிருந்த டாடா ஏஸ் வண்டியின் மீது மோதியதால் அந்த டாடா ஏஸ் வாகனம் நடந்து சென்று கொண்டிருந்த முத்துவீரன் மீது மோதிவிட்டது. விபத்தின் காரணமாக முத்துவீரனுக்கு தலை மற்றும் இரண்டு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அந்த ஜே.சி.பி வாகனத்தின் ஓட்டிவந்தவர் தற்போது எனக்கு ஞாபகத்தில் இல்லை. 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தும், முத்துவீரனின் மனைவிக்கும் தகவல் சொன்னோம். விபத்து பற்றி முத்துவீரன் மனைவி சிவகிரி காவல்நிலையத்தில் புகார் செய்தார். முத்துவீரனை முதலில் சிவகிரி அரசு மருத்துவமனைக்கும் பின்னர்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:49:49 +0530

மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கும் கொண்டு சென்றார்கள். பின்பு அன்றைய தினமே இரவு சுமார் 12.30 மணியளவில் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டார். அடுத்த நாள் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வந்து இறந்து போன முத்துவீரனின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரிக்கும்போது நானும் உடன் இருந்தேன். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

இறந்து போன முத்துவீரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு அல்ல பழக்கம். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். வேறு எங்காவது வைத்து விசாரித்தார்களா என்றால் சிவகிரி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் இறந்து போன முத்துவீரன் எனக்கு மாமன் முறை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் பதிவெண்ணையும் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அந்த ரோடு கிழமேல் ரோடு என்றாலும், போக்குவரத்து நெரிசல் அதிமுள்ள பகுதி என்றாலும் சரிதான்.

2. அந்த ரோட்டில் இரண்டு புறமும் மண்பாதை உள்ளது என்றால் சரிதான். கருக்கம்பாளையம் சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5,6 கி.மீ. தூரம் இருக்கும். அந்த இடத்திற்கு என்ன காரணத்திற்காக சென்றேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சாட்சி பழனிச்சாமி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். சாட்சி பழனிச்சாமியும், இறந்துபோன முத்துவீரனும் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். முருகன் டீக்கடை வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். நாங்கள் தெற்கு பார்த்து டீ குடித்துகொண்டிருந்தோம் என்றால் வடக்கு பார்த்து நின்று தான் டீ குடித்துகொண்டிருந்தோம்.

3. டாடா ஏஸ் வண்டி எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வண்டி மண்பாதையில் நின்று கொண்டிருந்ததா அல்லது தார் ரோட்டில் நின்று கொண்டிருந்ததா என்று கூற முடியுமா என்றால் முடியாது. சம்பவமானது முருகன் டீக்கடைக்கு நேர்எதிரே நடந்தது என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:49:53 +0530

சரிதான். எவ்வளவு தூரத்தில் சென்று கொண்டிருந்தார் என என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல, 5 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தார். அந்த விசயத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. என்னிடம் தொலைபேசி உள்ளது என்றால் சரிதான். பழனியம்மாளுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் பழனிச்சாமி என்பவர் செல்போன் மூலமாக தகவல் சொன்னார். பழனியம்மாளின் செல்போன் நெம்பர் அவருக்கு தெரியும் என்றால் தெரியும். மேற்படி பழனிச்சாமி அ.சா.1க்கு எவ்வாறு பழக்கம் என்றால் வேலைக்கு செல்வதில் பழக்கம். எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 10, 20 வருடங்களாக பழக்கம்.

4. நாங்கள் இருவரும் வெவ்வெறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அந்த சின்னியம்பாளையம் காலனியில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 100 வீடுகள் இருக்கும். அந்த இடத்தில் டீக்கடைக்காரர், அருகில் இருந்த வீட்டுக்காரர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு போலீசார் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் அரைமணிநேரத்தில் வந்தார்கள். போலீசார் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து தான் முத்துவீரனை அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். டாடா ஏஸ் வாகனம் முன்புறம் மற்றும் பின்புறம் அடிபட்டு நசுங்கி இருந்தது என்றால் சரிதான். டாடா ஏஸ் வாகனம் ஓட்டக்கூடிய நிலையில் இல்லாமல் இருந்தது என்றால் சரிதான். அடிபட்ட இடத்தில் டாடா ஏஸின் உதிரிபாகங்கள் கிடந்தது என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடம் மற்றும் வாகனங்களை புகைப்படம்எடுத்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. பழனியம்மாள் நேராக மருத்துவமனைக்கு தான் வந்தார் என்றால் சரிதான், மருத்துவமனைக்கு வந்தபிறகு சம்பவ இடத்திற்கு வந்தார்.

5. அ.சா.1 வருவதற்கு முன்னரே அடிபட்டவரையும் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்துவிட்டோம், அடிபட்ட வாகனங்கள் எதுவும் அந்த இடத்தில் இல்லை. காவல்நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான் தான் காவல்நிலையம் சென்று கூறினேன். சம்பவம் நடந்த உடன் காவல்நிலையத்திற்கு சென்று தகவல் சொல்லி நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி கொண்டு அதில் நான் கையொப்பம்செய்து பழனிச்சாமியும் கையொப்பம் செய்தார். நான் இதற்கு முன்னர் நஷ்டஈடு வழக்கிற்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:49:58 +0530

சாட்சியம் சொல்ல வந்தேன் என்றால் சரிதான். நான் எனது ஊரான கருக்கம்பாளையத்தில் இருந்து சின்னியம்பாளையம் காலனிக்கு வருவதற்கு முன்னரே அம்மன்கோவில், சிவகிரி ஆகிய இரண்டு நகரங்கள் உள்ளது அங்கேயும்டீக்கடை உள்ளது என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. அ.சா.1 நஷ்டஈடு வழக்கிற்காக கொடுத்த தவறான புகாரின் பேரில் அதிக நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் போலீசார் சொல்லிக்கொடுத்து முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.10 08:50:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:3

| Name | பழனிச்சாமி (PW 3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, கருக்கம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.2 மாரிமுத்து என்பவரை எனக்கு தெரியும். 30.04.2023ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் சிவகிரி சின்னியம்பாளையம் காலனியில் உள்ள முருகன் டீக்கடையில் நானும் மாரிமுத்துவும் டீ சாப்பிட்டு கொண்டிந்தோம். எங்களுக்கு தெரிந்த முத்துவீரன் என்பவர் அந்த டீக்கடை வழியாக நடந்து சென்று கொண்டிந்தார். அந்த ரோடு சிவகிரியில் இருந்து கொடுமுடி செல்லும் ரோடாகும். முத்துவீரன் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடது புற ஓரமாக நடந்துசென்று கொண்டிந்தார். அப்போது சிவகிரி சின்னியம்பாளையம், காலனி அருகே டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதற்காக நின்றுகொண்டிருந்தது. அப்போது ஜே.சி.பி. வண்டி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வேகமாக வந்து டாடா ஏஸ் வண்டியின் மீது மோதியது. அதனால் டாடா ஏஸ் வண்டி முத்துவீரனின் மீது மோதிவிட்டது.

2. அந்த ஜே.சி.பி வாகனத்தின் எண் எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் அதை ஓட்டிவந்தவர் பெயர் சதீஷ் ஆகும், அவரை பார்த்தால் எனக்கு தெரியும். (எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) விபத்தை நானும், மாரிமுத்துவும் நேரில் பார்த்தோம். முத்துவீரனுக்கு தலையிலும், இடது கால், வலது கால் பாதத்தில் பலத்த அடிபட்டு ரத்த காயம் இருந்தது. காயம் பட்ட முத்துவீரனை

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.10 08:50:29 +0530

108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு மேல்சிகிச்சைக்காக முத்துவீரனை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்றைய தினம் இரவு சுமார் 12.30 மணியளவில் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து பற்றி முத்துவீரனின் மனைவி அ.சா.1பழனியம்மாள் சிவகிரி காவல்நிலையத்தில் புகார் செய்திருந்தார். போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வைக்கப்பட்டிருந்த முத்துவீரனின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரிக்கும்போது நானும் உடன் இருந்தேன். மேலும் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரிக்கும் போது நானும் உடன் இருந்தேன். சம்பவ இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டினேன். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எனது ஊர் சம்பவ இடத்தில் இருந்து 5கி.மீ.தொலைவில் உள்ள கருக்கம்பாளையம் என்றால் சரிதான். எனது ஊரில் இருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பு அம்மன்கோவில், சிவகிரி போன்ற டீக்கடைகள் உள்ள நகரம் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன முத்துவீரன் எனக்கு உறவு முறை இல்லை என்றால் சரிதான். போலீசாரிடம் உறவு முறை குறித்து கூறவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் வாகன பதிவெண் பற்றி கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்த பிறகு வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முருகன் டீக்கடைகக்கு நேர்எதிர் ரோடு தான் சம்பவ இடம் என்றால் சரிதான். டீக்கடைக்கு அருகில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு உடனே தகவல் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அ.சா.1ற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான் தகவல் சொன்னேன்.

2. அ.சா.1 அரசு மருத்துவமனைக்கு தான் வந்தார் என்றால் சரிதான். அடிபட்ட வேகத்தில் டாடா ஏஸ் வண்டி தலைக்குப்புற விழுந்து நசுங்கி இருந்தது என்றால் சரிதான். தலைக்குப்புற கிடந்த டாடா ஏஸ் வண்டியை போலீசார் வந்து போட்டோ எடுத்து பின்னர் தான் அந்த வண்டியை நிமித்தி காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். மேற்படி டாடா ஏஸ் வண்டி ஓட்ட முடியாத நிலையில் இருந்ததால் வேறு ஒரு வாகனத்தில் வைத்து எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். அந்த ரோடு போக்குவரத்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:50:33 +0530

நெரிசல் அதிகம் உள்ள ரோடு என்றால் சரிதான். சின்னியம்பாளையத்திற்கு செல்ல இரண்டு பாதைகள் வடக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். அந்த இரண்டு பாதைகளுக்கு முன்னரே வேகத்தடைகள் உள்ளது என்றால் சரிதான். வேகத்தடையை தாண்டி தான் ஜே.சி.பி வாகனம் வந்தது என்றால் சரிதான்.

3. சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது முத்துவீரன் அடிபட்டு கிடந்தார். நானும், மாரிமுத்து என்பவரையும் தவிர வேறு யாரும் அங்கு நின்று பேசிக்கொண்டிருக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.2ம் சத்தம் கேட்டு இருவரும்சென்று பார்த்தபோது தான் முத்துவீரன் அடிபட்டு கிடந்தார். சம்பவம் நடந்த உடன் சிவகிரி காவல்நிலையத்திற்கு நானும், அ.சா.1 பழனியம்மாளும் சென்றோம் என்றால் சரிதான். முத்துவீரன் இறப்பதற்கு முன்பே அ.சா.1 சிவகிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த புகாரில் நானும் அ.சா.2 மாரிமுத்துவும் சாட்சி கையொப்பம்செய்தோம். முத்துவீரன் இறந்ததற்கு பின்னிட்டு சிவகிரி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுக்க சொன்னார்கள், அ.சா.1 பழனியம்மாள் ஒரு புகார் கொடுத்தார், அதில் நானும், அ.சா.2 மாரிமுத்துவும் சாட்சி கையொப்பம் செய்தோம். முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போலீசார் சொல்லி கொடுத்ததன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.10 08:50:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.